# சில வரிச் செய்திகள்!

## கிருஷ்ணகிரி பட்டாசு விபத்து:


## பலி எண்ணிக்கை 9 ஆக உயர்வு!

கிருஷ்ணகிரி, ஜூலை 31 -

கிருஷ்ணகிரி பட்டாசு விபத்தில் சிக்கி படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டம் பழைய பேட்டையில் தனியாருக்கு சொந்தமான பட்டாசு குடோனில் நேற்று பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. பயங்கர சத்தத்துடன் குடோனில் இருந்த பட்டாசுகள் வெடித்து சிதறின. பட்டாசு குடோன் குடியிருப்பு நிறைந்த பகுதியில் அமைந்திருந்ததால் அருகில் உள்ள வீடுகளும் இடிந்து தரைமட்டமாகின. விபத்து குறித்து தகவலறிந்த போலீசார், தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விபத்தில் ஏற்கனவே 8 பேர் உயிரிழந்த நிலையில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. விபத்தில் சிக்கி படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனையடுத்து பலி எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த 9 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## சியாட்டில் நகர சமூக விழாவில் துப்பாக்கிச்சூடு: 5 பேர் பலி!

வாஷிங்டன், ஜூலை 31 -



அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ளது சியாட்டில் நகரம். அங்குள்ள ரெய்னர் பீச் பகுதியில் உள்ள 'சேப்வே' கடையில் சியாட்டில் சமூக பாதுகாப்பு தொடர்பான ஒரு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இலவச உணவு, இசை என இந்நிகழ்ச்சியில் மக்களை ஒன்றிணைக்கும் பல அம்சங்கள் இருப்பதால், மக்கள் பெருமளவில் உற்சாகமாக பங்கேற்பது வழக்கம். நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, துப்பாக்கி ஏந்திய ஒருவன் திடீரென அங்கு கூடியிருந்த மக்களை நோக்கி சரமாரியாக சுட்டான். இதில் 5 பேர் கொல்லப்பட்டனர். பலியானவர்களில் 4 ஆண்களும் 1 பெண்ணும் அடங்குவர். 2 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு ஹார்பர்வியூ மருத்துவ மையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் ஆபத்தான நிலையில் உள்ளனர்.

## ஆகஸ்ட் 5 முதல் மேட்டுப்பாளையம் - உதகை இடையே சிறப்பு ரெயில்!

நீலகிரி, ஜூலை 31 -

மேட்டுப்பாளையம் உதகை இடையே மலை ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இந்த மலை ரெயிலில் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் பயணம் செய்து மலைப்பகுதியில் உள்ள இயற்கை எழில் காட்சிகளை கண்டு ரசித்து வருகின்றனர். இந்த நிலையில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக மேட்டுப்பாளையம் உதகை இடையே ஆகஸ்ட் 5 முதல் 27 ஆம் தேதி வரை வார இறுதி நாட்களான சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சிறப்பு ரெயில்கள் இயக்கப்படும் என ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

## கேரளாவில் திடீரென தீ பிடித்து எரிந்த அரசு பேருந்து! பயணிகள் காயமின்றி தப்பினர்!

திருவனந்தபுரம், ஜூலை 31 -

கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் பயணிகள் பேருந்து திடீரென தீப்பிடித்து எரிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அட்டிங்கல்திருவனந்தபுரம் வழித்தடத்தில் இயக்கப்படும் அரசு பேருந்து செம்பகமங்கலம் அருகே வந்தபோது இன்ஜின் பகுதியில் புகை வெளிவந்தது. இதை கவனித்த ஓட்டுநர் உடனே பேருந்தை நிறுத்தி பயணிகளை வெளியேற்றினார்.



சில நிமிடங்களில் பேருந்தில் திடீரென தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. இந்நிலையில் தீயணைப்பு துறையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். பேருந்து ஓட்டுநரின் சாமர்த்தியத்தால் பயணிகள் எந்தவித காயமுமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சீனாவை எதிர்கொள்ள தைவானுக்கு அமெரிக்கா ரூ.3 ஆயிரம் கோடி மதிப்பில் ராணுவ உதவி!

வாஷிங்டன், ஜூலை 31 -

கிழக்காசிய ஜனநாயக நாடான தைவானை, சீனா தனது தேசத்தின் ஒரு பகுதியாக அறிவித்தது. ஆனால், தைவான் இதனை ஏற்க மறுத்து வருகிறது. தேவைப்பட்டால் ராணுவ ஆக்ரமிப்பு மூலம் தைவானை கைப்பற்ற போவதாகவும் சீனா கூறி வருகிறது.

கடந்த ஆண்டு, சீன இராணுவம் தைவானை சுற்றியுள்ள பகுதிகளில் 2 பெரிய ராணுவ பயிற்சிகளை நடத்தியது. இந்த பயிற்சிகளில் தைவான் தீவின் முற்றுகையும் நடைபெற்றது. இதன் காரணமாக இரு நாடுகளுக்கிடையே பதட்டம் நிலவி வருகிறது.

இந்நிலையில் சீனாவிலிருந்து வரக்கூடிய தாக்குதல்களை எதிர்கொள்ளவும், தற்காப்பு திறனை மேம்படுத்தி கொள்ளவும், தைவானுக்கு அமெரிக்கா சுமார் ரூ.2800 கோடி ($345 மில்லியன்) மதிப்பிலான ராணுவ உதவியை வழங்க போகிறது.

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

# திருமயம் சட்டமன்றத் தொகுதியில் கருத்துக்கேட்புக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை, ஜூலை 31 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருமயம், அறந்தாங்கி மற்றும் ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கழகத் தொண்டர்களின் வேண்டுகோளுக்கிணங்க கருத்துக்களைக் கேட்கும் பொருட்டு நாளை (01.08.2023 ஆம் தேதி) முதற்கட்டமாக திருமயம் தொகுதிக்குட்பட்ட கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள ஒன்றியங்களில் தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி கழகத் தொண்டர்களை நேரில் சந்தித்து கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெற இருக்கிறது. மேற்படி கூட்டத்தில் கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டு தங்களின் கோரிக்கை மற்றும் கருத்துக்களை தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

01.08.2023 - திருமயம் - பொன்னமராவதி தெற்கு - 9.00 - பொன்னமராவதி - 10.30 - கொப்பனாபட்டி, பொன்னமராவதி வடக்கு -11.30 - காரையூர், - 12.30 - அரசமலை ,

திருமயம் தெற்கு - - 3.30 - கோனாப்பட்டு, 4.30 - திருமயம்,

திருமயம் வடக்கு - 5.30 - ராங்கியம் - 6.30 - நச்சாந்துப்பட்டி,

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வெள்ளி மேடு பேட்டையில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் முன்னிலையில் தே.மு.தி.க. அவைத்தலைவர் எத்திராஜ் தலைமையில் அக்கட்சியைச் சேர்ந்த 25 பேர் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், ஒன்றிய செயலாளர் ராஜாராம் ஆகியோர் உள்ளனர்.

## கிருஷ்ணகிரி பட்டாசு சில்லறை விற்பனைக் கடையில் வெடி விபத்து!

# பலியான 9 பேரின் குடும்பத்திற்கு தலா ரூ.3 லட்சம் நிதி உதவி!

## அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

கிருஷ்ணகிரி, ஜூலை 31 -

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கிருஷ்ணகிரி நகராட்சி, பழையபேட்டை, நேதாஜி ரோடு, போகனப்பள்ளியில் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு சில்லரை விற்பனை கடை வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கும், காயமடைந்து மருத்துவச்சிகிச்சை பெற்று வருபவர்களை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேற்று முன்தினம்(29.07.2023) நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.



கிருஷ்ணகிரி பட்டாசு சில்லறை விற்பனை கடை வெடி விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்பத்தாருக்கு தலா 3 லட்சம் ரூபாய் காசோலையை உணவு மற்றும் உணவு பாதுகாப்பு துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கி ஆறுதல் கூறினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் சரயு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ் உடனிருந்தனர்.

பின்னர் விபத்து நடந்த பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர்

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது;

கிருஷ்ணகிரி நகராட்சி, பழையபேட்டை, நேதாஜி ரோடு, போகனப்பள்ளியில் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு சில்லரை விற்பனை கடையில் 29.07.2023 அன்று காலை எதிர்பாராத விதமாக வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். காயமடைந்த 12 நபர்களுக்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு, தற்போது அவர்களின் நிலைமை சீராக உள்ளது.

இந்த துயரச் செய்தியினை அறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு துரிதப்படுத்த ஆணையிட்டுள்ளார். மேலும், இவ்விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவருபவர்களுக்குச் சிறப்பு சிகிச்சையும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்ததோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா ரூ.3 இலட்சமும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு ரூ.1 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனைத்தொடர்ந்து, இவ்விபத்தில் உயிரிழந்த ரவி, திருமதி.ரித்திகா, செல்வன்.ருத்தீஷ், இம்ரான், இப்ராஹிம் கலீலுல்லா, திருமதி.ராஜேஸ்வரி, சிவராஜ் ஆகிய 7 பேர் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சேலம், தருமபுரி மாவட்டத்திலிருந்து கூடுதலாக மருத்துவர்களைக் கொண்டு சிறப்பான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விபத்து குறித்த காரணங்களை தருமபுரி தடவியல் நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். அதற்கான விவரம் பிறகு தெரிவிக்கப்படும் என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர்அர.சக்கரபாணி தெரிவித்தார்.

அப்போது உடன் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன் , சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி சுகவனம், மேற்கு மாவட்ட துணை செயலாளர் முருகன் , மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம். வெங்கடேசன , மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசு மூர்த்தி , தலைமை செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப் , பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம் , கிருஷ்ணகிரி நகர செயலாளர் நவாப் , ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன் , ரகுநாத் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில்

# கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்பப்பதிவு முகாம்கள்!

## அமைச்சர் ஆர்.காந்தி நேரில் ஆய்வு!

திருவள்ளூர், ஜூலை 31 -

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மாவட்டத்தின் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் முதற்கட்ட விண்ணப்ப பதிவு முகாம்களை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பயனாளிகள் மற்றும் தன்னார்வலர்களோடு கலந்துரையாடி ஆலோசனைகள் வழங்கினார்.

முதலாவதாக, திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை ஊராட்சி ஒன்றியம், எஸ்.வி.ஜி.புரம் ஊராட்சி கிராம ஊராட்சி சேவை மைய கட்டிடத்தில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் முதற்கட்ட விண்ணப்ப பதிவு முகாமையும் திருத்தணி வட்டத்திற்குட்பட்ட கே.ஜி.கண்டிகை ஊராட்சி மற்றும் டாக்டர்.ராதாகிருஷ்ணன் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, திருவள்ளூர் வட்டத்திற்குட்பட்ட பட்டரை பெரும்புதூரில் உள்ள இ சேவை மையம் மற்றும் திருப்பாச்சூர் ஊராட்சி அலுவலகம் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களையும் ஊத்துக்கோட்டை வட்டத்துக்கு உட்பட்ட அம்மம்பாக்கம் சித்தேரி அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் ஊத்துக்கோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து அம்முகாம்களில் உள்ள பயனாளிகளோடு கலந்துரையாடி கருத்துகளை கேட்டறிந்தார்.

தொடர்ந்து, அம்முகாம்களில் உள்ள தன்னார்வலர்களோடு கலந்துரையாடி அவர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கினார்.

மேலும், திருவள்ளூர் வட்டத்திற்குட்பட்ட வெங்கல் மகளிர் சுய உதவி குழு கட்டிடம் மற்றும் நத்தமேடு நூலக கட்டிடம் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களையும் ஆவடி உயர்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமை திட்ட விண்ணப்ப பதிவு முகாம்களையும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பயனாளிகளோடு கலந்துரையாடி, அம்முகாம்களில் உள்ள அரசு அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கினார்.



திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் ஒன்றியம் வேலம்பாளையம் ஊராட்சியில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பதிவு செய்து வரும் முகாமினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு செய்தார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், தெற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், மூலனூர் பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.கே.ரவிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி**

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.16/2023–2024/வ1/நாள்–26.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், **தூத்துக்குடி (நெ), க(ம)ப கோட்டம்** சார்ந்த **சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 (8 வேலைகள்) திட்டப்பணிக்கு** இணையவழியில் மட்டுமே **இருஉறை** முறையில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **21.08.2023 – 14.00 மணிவரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **05.08.2023 முதல்** தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ/4150/ஒப்பந்தப்புள்ளி/2023

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ)**
**க(ம)ப வட்டம், திருநெல்வேலி**

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"


# குரு - சிஷ்யன்



**சிஷ்யன்:** - 'என்மண் - என்மக்கள்'என்றால்என்னகுருவே?

**குரு:** - ஓ! நீ கால், அரைக்கால் வேக்காடு நடைபயணம் பற்றி கேட்கிறியா?

என், எனது என்றாலே தனித்துவம்.

"நாம்", "நமது" என்று உச்சரிக்கும் போதுதான் உதடுகள் ஒட்டும். எனவேதான் கூட்டணிக் கட்சிகளான அ.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க. போன்ற கட்சிகள் எவையும் ஒட்டவில்லைபோலும்!

**திருமதி பி.விஜயலட்சுமி**